திடலின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க அறிவாலயம் பணியாற்றும்!

சுயமரியாதை இயக்கத்தின் ஆட்சி அதிகார நீட்சியான 'திராவிட மாடல்' தொடரும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 5-

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டையொட்டி வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "திடலின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க அறிவாலயம் பணியாற்றும்! நூறாண்டு கண்ட சுயமரியாதை இயக்கத்தின் ஆட்சி அதிகார நீட்சியான 'திராவிட மாடல்' தொடரும்!" என்று குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

நமது ஒட்டுமொத்தப் போராட்டத்தையும் ஒற்றைச் சொல்லில் அடையாளப்படுத்த வேண்டும் என்றால், அதுதான் சுயமரியாதை!

அந்த உணர்வை நம்முள் விதைத்து, மானமும் அறிவும் உள்ள மக்களாக நம்மை மாற்றிய தந்தை பெரியாருக்காகத் திருச்சி சிறுகனூரில் அமையும் பெரியார் உலகத்துக்குத் தி.மு.க.வின் அனைத்து எம்.எல்.ஏ., எம்.பி.களும் தங்களது ஒரு மாத ஊதியத்தை வழங்குவோம்!

மானமிகு ஆசிரியர் அய்யா அவர்களே... உங்கள் பணிகளை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம்!

திடலின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க அறிவாலயம் பணியாற்றும்! நூறாண்டு கண்ட சுயமரியாதை இயக்கத்தின் ஆட்சி அதிகார நீட்சியான 'திராவிட மாடல்' தொடரும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மணப்பாறை அறிவுசார் மையத்தில் பயின்று அரசு பணிக்கு தேர்வானவர்களை நேற்று (04.10.2025) நடைபெற்ற விழாவில் பொன்னாடை அணிவித்து, புத்தகம் பரிசளித்து, சிறப்பாக அரசு பணி மேற்கொள்ள வாழ்த்தினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநிலங்களவை உறுப்பினர் திருமதி ராஜாத்தி (எ) கவிஞர் சல்மா, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல்சமது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரணி, அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – மேயர் வசந்தகுமாரி பங்கேற்பு!

'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்' மூலம் 4.63 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்!

தாம்பரத்தில் முகாமைப் பார்வையிட்ட பின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக். 5 –

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, குரோம்பேட்டை ஹோலி ஏஞ்சல்ஸ் மேல்நிலைப் பள்ளியில் "நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமினை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் அனைத்து துறைகளிலும் பல்வேறு வகைகளில் சிறப்பு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மக்கள் நல்வாழ்வு துறையில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48, பாதம் பாதுகாப்போம், இதயம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவ ஆய்வகம், தொழிலாளர்களை தேடி மருத்துவம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், அதேபோல் புற்று நோய் கண்டறியும் சிறப்பு முகாம்கள் என்று பல்வேறு வகைகளிலான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மக்களை தேடி மருத்துவம் எனும் திட்டத்தின் மூலம் தொற்றா நோய்களுக்கான மருத்துவம் என்கின்ற வகையில் 2.5 கோடி பயனாளிகள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற மகத்தான திட்டமாக இந்த திட்டம் இருந்து கொண்டிருக்கின்றது. அதேபோல் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின் மூலம் சாலை விபத்துகளில் சிக்கி உயிர் பிழைத்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்தை கடந்து பயன் பெற்றிருக்கிறார்கள். இப்படி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வருகிற சூழலில் தான் மக்களைத் தேடி முழு உடற் பரிசோதனை திட்டம் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற திட்டம் 02.08.2025 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் இந்த முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிப்பு வெளியானது, அந்த வகையில் இன்றைக்கு 9வது வாரமாக நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற இந்த மகத்தான திட்டம் இன்றைக்கு இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த திட்டத்தின்மூலம் முழு உடற் பரிசோதனைகள் செய்யப்பட்டு முடிவுகளை அன்று மாலையே அவர்களுக்கு Medical Record என்கின்ற வகையில் ஆவணப்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது. இம்முகாமில் சிறப்பு மருத்துவ சேவைகளாக பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம்,எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம்,நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்தியமுறை மருத்துவம் ஆகிய மருத்துவ சேவைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

பயன்கள்

இம்முகாம் தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 1256 மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு 388 ஒன்றியங்களில் தலா 3 என்கின்ற வகையிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 இடங்களிலும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையிலும் 1256 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்றைக்கு இதுவரை கடந்த வாரம் வரை 295 முகாம்கள் நடைபெற்று முடிந்திருக்கிறது. இதில் 1256 இல் 295 முகாம்கள் ஏற்கெனவே நடைபெற்று முடிந்துள்ளது. இன்று ஒரு நாள் மட்டும் சென்னை, நீலகிரி நீங்கலாக 38 இடங்களில் இம்முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே நடைபெற்ற முகாம்களில் 4,63,781 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். 4,63,781 பேருக்கும் முழு உடற் பரிசோதனைகள் என்கின்ற வகையிலான இந்த முகாம்கள் மிகப் பெரிய அளவில் மருத்துவ சேவை ஆற்றியிருக்கிறது. பொதுவாகவே தனியார் மருத்துவமனைகளில் முழு உடற் பரிசோதனைகளுக்கு ரூ.20,000/ வரை செலவாகும். ஆனால் இந்த முகாம்களை பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, எந்தவித கட்டணமில்லாமல் இந்த முகாம்களில் முழு உடற் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகிறது. இன்னொரு கூடுதல் சிறப்பம்சமாக இந்த முகாம்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்ட புதிய அட்டை பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 1.47 கோடி குடும்பங்கள் காப்பீட்டு திட்டத்தில் பயன் பெற்று வருகிறார்கள். அந்த வகையில் ஏற்கனவே நடைபெற்ற 295 முகங்களில் 17,087 பேருக்கு புதிய காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளும் இம்முகாமில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சான்றிதழ்கள் பெற்றிருந்தால் தான் அரசாங்கத்தின் சார்பாக வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை எளிதாக கிடைக்கும்.

இதற்கு முன்பு மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் பெறுவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் அலுவகத்திற்கு சென்றால் மட்டுமே வாங்க முடியும். அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த முகாம்களில் விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்ட நிலையில் இது வரை 9 வாரங்களில் நடைபெற்றுள்ள 295 முகாம்களில் 19,597 மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் பெற்றுள்ள மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை 9,45,787 பேர், இவர்களுடன் சேர்ந்து இன்றைக்கு புதிதாக 19,597 பேர் மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரை 27 இடங்களில் இந்த முகாம்கள் நடத்தப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படி அறிவிக்கப்பட்ட 27 முகாம்களில் இது வரை 8 முகாம்கள் நடைபெற்று முடிவடைந்திருக்கிறது. இந்த முகாம்களில் இதுவரை 10,497 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு குரோம்பேட்டை ஹோலி ஏஞ்சல்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 9வது முகாம் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மருந்து பாதிப்பு தொடர்பான கேள்விக்கு

கோல்ட்ரிப் இருமல் மருந்து பாதிப்பு தொடர்பாக மருந்து கட்டுப்பாட்டுத்துறையின் சார்பில் விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மருந்துகளின் காலாவதி தேதி மற்றும் Manufacturing செய்த விவரங்கள் சேகரிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. எவ்வளவு நாட்களாக இந்த மருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளது, இது வரை சென்ற நாட்களில் எங்கேயாவது பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா, வடநாட்டில் பயன்படுத்தி இருப்பதாக இருந்தால் அந்த மருந்து காலாவதியானதா போன்ற அனைத்து கோணங்களிலும் விசாரணை செய்ய சொல்லி இருக்கிறோம். அதற்குரிய முடிவுகள் வந்தவுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த மருந்து தொடர்பாக வேறு எங்கேயும் புகார்கள் வரவில்லை. காலாவதியான மருந்துகள் பயன்படுத்தும் போது அந்த மாதிரியான பாதிப்புகள் ஏற்படும். அந்த கோணத்திலும் விசாரிக்க சொல்லியிருக்கிறோம். விசாரணையின் முடிவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு

ஒவ்வொரு பருவமழைக்கு முன்பாகவும் காய்ச்சல், சளி, இருமல் போன்ற பாதிப்புகள் ஏற்படுவது வழக்கம். இதற்காக தான் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மருத்துவ முகாம்கள் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டு வருகின்றது. பருவமழை இன்னும் தொடங்கவில்லை. தமிழ்நாட்டில் 2336 ஆரம்ப சுகாதார நிலையங்கள். 299 வட்டார மருத்துவமனைகள், 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், 2 பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைகள் மற்றும் 14,000 மருத்துவ கட்டமைப்புகள் இருக்கின்றது. இந்தியாவிலேயே அதிக மருத்துவக்கட்டமைப்புகள் இருப்பது தமிழ்நாட்டில்தான். எனவே காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனைகளில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அறிவுறுத்தலோடு, பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு முன்னாள் பருவ மழைக்காலத்திற்கு முன்பு வரை பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து எந்தவித கூட்டங்களும் நடத்தப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு இக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வரும் 07.10.2025 அன்று ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை அலுவலகத்தில் இக்கூட்டம் நடத்தப்படவிருக்கிறது.

தாம்பரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தொடர்பான கேள்விக்கு

வரும் 06.10.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காட்பாடியில் கட்டப்பட்டு இருக்கும் மருத்துவமனையை திறந்து வைக்க உள்ளார்கள். அந்த நிகழ்விற்கு பிறகு வரும் செவ்வாய்க்கிழமை அன்று தாம்பரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை ஆய்வு செய்ய உள்ளேன். இம்மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள் தேவையோ அத்தனை பேரும் உள்ளார்கள். இன்னும் என்னென்ன தேவை இருக்கின்றது என்பது குறித்து முதன்மை மருத்துவ அலுவலர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். மருத்துவமனையில் நேரிடையாக ஆய்வு செய்து என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறித்து உங்களிடம் தெரிவிக்கின்றேன். இம்மருத்துவமனை ஆரம்பித்து 2 மாதம் தான் ஆகின்றது. இம்மருத்துவமனையில் கூடுதல் வசதிகள் பட்டியல் கேட்டு ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.வசந்தகுமாரி கமலக் கண்ணன்,பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குனர் மரு.சோமசுந்தரம், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ், மண்டல குழு தலைவர் டேவிட் அண்ணாதுரை, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பானுமதி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

திரு.வி.க.நகரில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" 227வது நாள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்! மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை, அக். 5 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 227 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (04.10.2025), திரு.வி.க. நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 72, கஸ்தூரிபாய் காலனி, B.பிளாக், (போலிஸ் பூத் பின்புறம்), கன்னிகாபுரம். 2) வட்டம் 72அ திரு.வி.க.நகர் 2வது தெரு, மு.க.கலைஞர் நற்பணி மன்றம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது,

வட்ட செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ர மூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ். சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன்.

இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி – வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தலைமைக் கழக அறிவுறுத்தலுக்கு ஏற்ப பாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான வாக்குச்சாவடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களோடு நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) இணைந்து தேர்தல் பணிகளை ஆற்றிட ஏதுவாக எடுக்கப்பட வேண்டிய முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் இன்று (05.10.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில், ஓட்டல் பெரம்பூர் ஸ்ரீனிவாசா கூட்ட அரங்கில், சென்னை சில்க்ஸ் அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் (திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.) எனது தலைமையில் மண்டலப் பொறுப்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளரும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன் கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம் திருத்தணி தொகுதிப் பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதிப் பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ், மாவட்டக் கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், கலந்து கொள்கின்றனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியம் மலையாங்குளம் ஊராட்சியைச் சேர்ந்த பா.ம.க., அ.தி,மு,க, உள்ளிட்ட மாற்று கட்சிகளில் இருந்து பா.ம.க. தட்சிணாமூர்த்தி, அ.தி.மு.க. வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, யுவராஜ், சம்பத், தே,மு,தி.க. வைச் சார்ந்த குமார் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர் உடன் ஒன்றியச் செயலாளர் டி.குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

நெல்லை கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளராக நியமிக்கப் பட்டுள்ள ம.கிரகாம்பெல் களக்காட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் கழக நிர்வாகிகள் முன்னாள் எம்பி ஞான திரவியம்,ஜார்ஜ் கோசல்,நம்பி, ராஜன்,செல்வகருணாநிதி,ஜோசப் பெல்சி,சுடலைக்கண்ணு,எரிக் ஜீடு பரமசிவஜயப்பன்,சாந்தி சுபாஷ், மணி சூரியன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.தொடர்ந்து பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார்,பெருந்தலைவர் காமராஜர், சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர்,நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்,பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஆகியோர்களது திருவுருவ சிலைகளுக்கும்,வ.உ.சிதம்பரனார், அழகுமுத்துக் கோன் ஆகியோர் களின் திருவுருவபடத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.